ஓமலூர் ஊராட்சி ஒன்றியம், பாகல்பட்டி ஊராட்சி
நிர்வாக அதிகாரி / ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்
முன்னிலை: திருமதி.ஆர். பழனியம்மாள்,

ந.க.எண். 5 / 2023–2024 / ஊ.செ., நாள்: 13.03.2024

பொருள்: மனைப்பிரிவு – சேலம் மாவட்டம் – ஓமலூர் வட்டம் – ஓமலூர் ஊராட்சி ஒன்றியம் – பாகல்பட்டி ஊராட்சி – பாகல்பட்டி கிராமம் சர்வே எண்.24/4Bல் – 1.5725 ஏக்கர் (அ) 6363.68 சதுர மீட்டர் பரப்பில் மனைப்பிரிவு அனுமதி கோரியது – குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப அனுமதி வரப்பற்றது – ஒப்புதல் வழங்கி உத்தரவிடல்.

பார்வை: 1. நகர் ஊரமைப்புத் துறை சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.19799/2020, நாள்:24.12.2020.
2. அரசாணை எண்.138, வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்: 04.06.2004.
3. அரசாணை (நிலை) எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:04.02.2019 மற்றும் அரசாணை எண்.16, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்:31.01.2020.
4.அரசாணை எண்.181, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை ந.வ.4(1), நாள்:09.12.2022.
5. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை நாள்:16.07.2022.
6. அரசு கடிதம் எண்.19113.நவ4 4(3).2017–1 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்:30.08.2017.
7.நகர் ஊரமைப்பு ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.13686/2017/LA1, நாள்:08.09.2017.
8.நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.320/2022/TCP3, நாள்:07.01.2022.
9.நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.4367/2029/TCP2, நாள்:14.10.2019.
10.நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், சேலம் மண்டலம் அவர்களது நடவடிக்கை ந.க.எண்.SLM/EVFA4E8B/820842/2024/TCP, நாள்: 25.01.2023.
11. பாகல்பட்டி ஊராட்சி மன்றத் தலைவர் அவர்களுக்கு வழங்கப்பட்ட தான ஆவண எண்.1649/2024, நாள்:17.02.2024.
12. திரு.K.R.R.ஹரேஷ் த/பெ.R.ராஜசேகரன், க.எண்.5/124D, காவேரி அவென்யூ, ஸ்டேட் பேங்க் காலனி, அழகாபுரம், சேலம்–4, சேலம் மாநகரம் என்பவரின் விண்ணப்பம் நாள்:12.03.2024.
13. பாகல்பட்டி ஊராட்சி மன்றத் தீர்மானம் எண்.12(9), நாள்:12.03.2024.

உத்தரவு:–

சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாகல்பட்டி ஊராட்சியில் பாகல்பட்டி கிராமம் சர்வே எண்.24/4Bல் – 1.5725 ஏக்கர் (அ) 6363.68 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் SWP/DTCP/SALEM/LAYOUT No.59/2024 Planning Permission No.24/2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதியும் உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களின் பார்வை–8ல் காணும் கடிதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி பார்வை–11ன்படி உத்தேச மனைப்பிரிவு சாலை (மூலை முடக்கு உட்பட) பரப்பு 2414.87 சதுர மீட்டர் பரப்பளவும், பூங்கா பயன்பாட்டிற்காக 10% பரப்பளவும், உள்ளாட்சிக்கு பொது ஒதுக்கீடு உபயோக மனை 20.55 சதுர மீட்டர் பரப்பளவும் மற்றும் TANGEDCO-க்கு பொது ஒதுக்கீடு உபயோக மனை 20.37 சதுர மீட்டர் பரப்பளவும் தான ஆவண எண்.1649/2024, நாள்:17.02.2024ன்படி ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, பாகல்பட்டி ஊராட்சி பாகல்பட்டி கிராமம் சர்வே எண்.24/4Bல் – 1.5725 ஏக்கர் (அ) 6363.68 சதுர மீட்டர் பரப்பில் கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கான தொழில்நுட்ப ஒப்புதல் மற்றும் திட்ட அனுமதி பார்வை–8ல் காணும் செயலாணையின்படி ஒப்புதல் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து பார்வை–13ல் கண்டுள்ள பாகல்பட்டி ஊராட்சி மன்றத்தின் தீர்மானத்தின்படி அடிப்படையில் மற்றும் வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் தொழில் நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்ட கடிதங்களில் உள்ள நிபந்தனைகள் அடிப்படையில் மேற்படி உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு ஒப்புதல் வழங்கி உத்தரவிடப்படுகிறது.

இணைப்பு: வரைபடம்.

ர.பழனியம்மாள்
தலைவர்
பாகல்பட்டி ஊராட்சி,
ஓமலூர் ஒன்றியம்.

12.3.24

பெறுதல்

திரு.K.R.R.ஹரேஷ் த/பெ .R.ராஜசேகரன்,
க.எண்.5/124D, காவேரி அவென்யூ,
ஸ்டேட் பேங்க் காலனி, அழகாபுரம்,
சேலம்–4, சேலம் மாநகரம்.

நகல்: நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் / மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், சேலம்.
நகல்: ஊரக வளர்ச்சி உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), சேலம் அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), ஓமலூர் அவர்களுக்குப் பணிந்தனுப்பப்படுகிறது.

ஓமலூர் ஊராட்சி ஒன்றியம்
பாகல்பட்டி ஊராட்சி

2024ம் ஆண்டு **மார்ச்** மாதம் **12.03.2024** ம் நாள் **செவ்வாய்** கிழமை காலை **11.00**மு.ப. மணிக்கு பாகல்பட்டி ஊராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் ஊராட்சி மன்றத் தலைவர், திருமதி.ஆர்.பழனியம்மாள் அவர்கள் தலைமையில் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்.

பொருள் எண்: 12 (9)	தீர்மானம் எண்: 12 (9)
சேலம் மாவட்டம், ஓமலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பாகல்பட்டி ஊராட்சியில் பாகல்பட்டி கிராமம் சர்வே எண்.24/4Bல் – 1.5725 ஏக்கர் (அ) 6363.68 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவுக்கு வரைபடத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளின் பேரில் SWP/DTCP/SALEM/LAYOUT No.59/2024 Planning Permission No.24/2024 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதியும், சிறப்பு நிபந்தனைகள் மற்றும் பொது நிபந்தனைகளுடன் திட்ட அனுமதியும் உதவி இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் சேலம் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்படி பாகல்பட்டி கிராமம் சர்வே எண்.24/4Bல் – 1.5725 ஏக்கர் (அ) 6363.68 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ள உத்தேச மனைப் பிரிவிற்கு மனைப்பிரிவு அங்கீகாரம் வழங்க பரிந்துரை செய்ய மன்ற அங்கீகாரம் கோருதல்.	அங்கீகரிக்கப்பட்டது (ஒம்.)ஆர்.பழனியம்மாள், நிர்வாக அதிகாரி/ ஊராட்சி மன்றத் தலைவர், பாகல்பட்டி ஊராட்சி, ஓமலூர் ஊராட்சி ஒன்றியம்.

// உண்மை நகல் //

ஆர்.பழனியம்மாள்
நிர்வாக அதிகாரி/
ஊராட்சி மன்றத் தலைவர்,
பாகல்பட்டி ஊராட்சி,
ஓமலூர் ஊராட்சி ஒன்றியம்.

15.3.24